# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,046 — 1934 ம் ௵ வைகாசிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டம்போவலாவிலிருந்து உடப்புசல்லாவாவுக்கு ஓர் சிறு றோட்டு திறப்பதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

எக்ஸ்றுக்ற் 1, V. P. No. 410. குறிச்சி—ஊவா மாகாணத்திலிருக்கும் வதுளை டிஸ்திறிக்கின் கம்பகா கோறளையில் டியபொகன்பிறு (பகுதி).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 10½ | — | .. சின்னத்தெரு (புது) | .. மெஸ்சேஸ் எச். சீ. யும் சீ. யே. பாற்றேசன் (உடப்புசெல்லாவாவிலிருக்கும் அலகொல்லாத் தோட்டத்துச் சொந்தக்காரர்) | 0 0 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆனி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1934 ம் ௵ சித்திரைமீ 25 ந் உ.

காள்ற்றன் எஸ். கொறெயா,
ஊவா உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடகன்கொடவில் ஒரு பகிரங்க கிணற்றுக்கும் அதற்குப் போக்குவரவுசெய்யும் தெருவுக்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

உப இல. 2, கடைசிக் கிராமப்படத்து இல. 168. குறிச்சி—வதுளை டிஸ்திறிக், மெதகம்பற்று கோறளை, பக்கினகாவலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 7B | வெவகும்புற | .. ஒரு கிணறுள்ள றெற்பூமி | .. உடுகொடவிலிருக்கும் கேலகெதற கின்வண்டா | 0 0 3·7 |
| 7C | ஷை | .. றெற்பூமி | .. ஷை .. | 0 0 1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

113——J. N. 37023—123 (4/34)

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆனி மாசம் 22 ௳ தேதியிலன்று காலமே 10 மணிக்கு மெதகம கமான் வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1934 ம் ௵ சித்திரைமீ 25 ௳.

காள்ற்றன் எஸ். கொறெயா,
ஊவா உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பக்கினிககாவலையில் ஒரு கிணற்றுக்கு நிலமும் அதற்கு ஒரு பாதைக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

கடைசிக் கிராமப்படத்து இல. 168., உப படம் இல. 3. குறிச்சி—வதுளை டிஸ்திறிக்கில் மெதகம்பற்று கோறளையிலிருக்கும் பக்கினிககாவெலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 20C | ஜம்புககாவத்தை .. | கற்கட்டிடக் கிணறு .. | பக்கினிககாவெலையிலிருக்கும் (1) மீ. இபுறுகிம், (2) செ. அபூபக்கர், (3) அ. காசிம், (4) மீ. அப்துல் மஜீது, (5) மீ. கமீது, (6) மீ. செய்நம்பு, (7) மீ. ருவித்உம்மா, (8) உ. தாசிம் | 0 0 1 |
| 20D | ஷை .. | 52 வயசுள்ள ஒரு பாக்கு மரம்கொண்ட வளவு | ஷை .. | 0 0 1·30 |
| 20E | ஷை .. | 10 வயசுள்ள ஒரு பாக்கு மரம்கொண்ட வளவு | ஷை .. | 0 0 7·55 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆனி மாசம் 22 ௳ தேதியிலன்று காலமே 11 மணிக்கு மெதகம கமான் வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1934 ம் ௵ சித்திரைமீ 25 ௳.

காள்ற்றன் எஸ். கொறெயா,
ஊவா உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக், கும்பனித்தெருவு, சேர்ச் இஸ்றீற்,72 ம் நம்பரில் இருக்கும் தோமஸ் நீரிஸ் டிசாணுயக ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ம் ௵-த்து 1 ம் இலக்கச்சட்டத்தின் செடூல் 1 B யின் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குப்பின் களுத்துறை டிஸ்திறிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்சாக வேலைபார்க்கிறதற்கு றிஜிஸ்ருர் ஜெனரல் அவர்களுக்கு மனுசெய்வேனென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

1934 ம் ௵ தைமீ 30 ௳ தேதி.

இப்படிக்கு,
தோ. நீ. டிசாணுயக.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.